# விமானவிபத்தில் 100 பேர்பலி: திசைதிரும்பியும் விதி விடவில்லை

Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9

இதழ் 69

போன் 889

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க சித்திரை 8 முஹறம் 10 வெள்ளிக்கிழமை [21-4-67]

நிக்கோசியா, ஏப். 20 சைப்பிரஸில் நிக்கோசியாவுக்கு அருகே ஏற்பட்ட விமானவிபத்தில் 100க்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர். இவ்விபத்து இன்று அதிகாலையில் ஏற்பட்டது.

பம்பாயிலிருந்து கெய்ரோவுக்குச் செல்லும் பிரிட்டிஷ் விமானமே இவ்விபத்துக்குள்ளாகியது. சுவிஸ் சாட்பேர்ட் கம்பெனி ஒன்றுக்குச் சொந்தமான இவ்விமானத்தில் 130 பேர் பிரயாணஞ் செய்தனர்.

கடும் புயல், மழை காரணமாக, கெய்ரோ செல்லவிருந்த விமானம் வழியில் சைப்பிரஸ் மார்க்கமாகத் திருப்பப்பட்டது. ஆனால் நிக்கோசியாவுக்கு அருகில் விமானம் நிலைகுலைந்து விபத்துக்குள்ளாகியது.

இவ்விமானத்தில் பிரயாணம் செய்தவர் கிழக்காசியாவிலிருந்து திரும்பிய சுவிஸ், ஜெர்மன் உல்லாசப் பிரயாணிகளாவர்.

மனித சடலங்களும்,

[6-ம் பக்கம் பார்க்க]

# சதிவழக்கு: விரைவில் சுப்ரீம்கோர்ட் விசாரணை

## ஹல்ஸ்டோர்ப்பில் நடைபெற ஏற்பாடு

கொழும்பு, வியா. தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவிடப்பட்ட 22 எதிரிகள் மீதான குற்றப் பத்திரங்கள் தயாரிக்கும் வேலையை அட்டர்ணி ஜெனரல் காரியாலயம் மேற்கொண்டிருக்கிறது.

கொழும்பு அசைஸ் விசாரணைகளுக்கு முன்னதாகவே சதி வழக்கை விரைவில் விசாரணை செய்வதற்கான முயற்சிகளை சுப்ரீம் கோர்ட் பதிவுகாரியஸ்தர் மேற்கொள்ளவிருக்கிறார்.

ஹல்ஸ்டோர்ப்பிலுள்ள சுப்ரீம் கோர்ட்டிலேயே சதி வழக்கு விசாரணை செய்யப்படவிருப்பதாகவும் 'பினாக்ஸ்டாப்' வீதி நீதிமன்றத்தில் செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளைப்போலவே ஹல்ஸ்டோர்ப்பிலும் செய்யப்படுமென்றும் அறியப்படுகிறது.

கல்முனைக் கலவரம்

## 'என்கட்சிக்கு சம்பந்தம் இருப்பதாகக் கூறுவதுதவறு'

### செனட்டில் மந்திரி திருச்செல்வம்

கொழும்பு, வியாழன் 'கல்முனையில் நடைபெற்ற கலவரத்தின் முழுப்பொறுப்பையும் அரசாங்கம் எடுக்கவேண்டும். இக் காணித் தகராறு சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன்நடவடிக்கை எடுத்திருந்தால் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டிராது' என்று செனட் சபையில் கல்முனைக் கலவர நிலைமைபற்றிய விவாதம் எழுந்தபோது செனட்டர் மாணிக்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது: கல்முனை வாடிவீட்டிற்கருகாமையிலுள்ளமுடிக்குரிய காணித் துண்டுகளை தமக்கு விநியோகிக்கும்படி ஒருபகுதியினர் கோரிவந்தனர். ஆனால் அக்காணி அரசாங்க உபயோகத்திற்கு தேவையானது என்று மறுக்கப்பட்டது. ஆனால் இதன்பின்னர் இரவோடு இரவாக பலர் வந்து 150

]6-ம் பக்கம் பார்க்க]

## "நெஞ்சில் குத்தி, அடித்து காலால் உதைத்தனர்"

### வல்வைசம்பவவிசாரணையில் சாட்சிகூறியது

யாழ்ப்பாணம், வெள்ளி 'சம்பவதினத்தன்று நான் எனது கையில் வைத்திருந்த செய்திஎடுக்கும் குறிப்பு புத்தகத்தையும் பேனவையும் ஒரு இராணுவ வீரர்பறித்துவிட்டு கையால் ஓங்கி என் நெஞ்சில் குத்தினுர். மற்றொரு இராணுவவீரர் எனது வலதுகையில் பொல்லால்அடித்தார் அதன்பின் காலால் உதைத்தார். நான் அடி பொறுக்காமல் சனசமூகநிலையத்திற்குள் ஓடினேன்'

வல்வெட்டித்துறை ஆர். சிவஞானசுந்தரத்தின் மரண விசாரணையில் சாட்சியமளித்த வல்வெட்டித்துறை "ஈழநாடு" நிருபர் வல்லிபுரம் பழனிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினுர். இவ் விசாரணை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் நேற்றுக்காலை நடைபெற்றது.

விசாரணையைப் பார்ப்பதற்காககோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானேர் திரண்டு நின்றனர். பலர் விசாரணையைப் பார்க்கவசதியில்லாமல்திரும்பிச் சென்றனர்.

பழனிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:- சனசமூகநிலையத்துக்குள் பருத்தித்துறை எம். பி, யும், பட்டினசபைத்தலை

[ 6-ம் பக்கம் பார்க்க]

## "கூட்டத்தில் இருந்தவர்களை பொலிஸார் தாக்கினர்"

### பட்டினசபைத் தலைவர் சாட்சியம்

வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவர் திரு. வி. இரத்தினவடிவேலு சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "சென்ற 8ந் தேதி மாலை வல்வெட்டித்துறை சனசமூகநிலையத்தில் பொலிஸார் இராணுவத்தினரின் செயல்களைக் கண்டித்து திரு. ஞானமூர்த்தி தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் பொலிஸார் 'ஜீப்' ஒன்றில் வந்திறங்கி கூட்டத்தினரைத் தாக்கினர். இதனுல் கூட்டத்தினர்கள் அங்கும் இங்குமாக ஓடினர். ஒருசிலர் சனசமூக நிலையத்திற்குள்ளும் ஓடினர். இன்ஸ்பெக்டர் பத்திராஜு, சார்ஜன்ட் இராசரத்தினம் மற்றும் சில பொலிஸாரும் மேடைக்கு வந்தனர். வந்தவுடன் சனசமூகநிலைய தலைவருக்கு அடிக்க ஓங்கினுர். அந்நேரத்தில் சனநெருக்கடி காரணமாக நானும், எம். பி.யும் கீழே விழுந்துவிட்டோம். எழுந்து பார்த்தபோது இன்ஸ்பெக்டருடன் அவர் கதைத்துக்கொண்டிருந்தார். எம். பி.யும், நானும் இன்ஸ்பெக்டரைப் பார்த்து இக்கொடூரமான செயலை என்ன காரணத்திற்காகச் செய்தீர்கள் என வினவியபோது 'ஜெயக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## புதிய உதவி அரசாங்க அதிபர்

### முருகேசம்பிள்ளை பதவியேற்ருர்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபராக திரு. டி. முருகேசம்பிள்ளை நேற்று பதவியேற்ருர். வலிகாமம் வடக்கு காரியாதிகாரியாகக் கடமையாற்றி வந்த திரு. முருகேசம்பிள்ளை சிரேஷ்ட காரியாதிகாரிகளில் ஒருவராவார்.

## "20 லட்சம் வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள்"

### புதிய மசோதாவுக்கு வியாபாரிகள் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், வெள்ளி 'சகல கூட்டுஸ்தானங்களும், எப்பொருள்களிலும் வியாபாரம் செய்யலாம் என்று பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவிருக்கும் கார்ப்பரேஷன் திருத்த மசோதாவை, வடஇலங்கை வியாபாரிகளும், தென்னிலங்கை வியாபாரிகளும் ஒன்ருக சேர்ந்து, வன்மையாக கண்டிருப்பதோடு, கடுமையாக எதிர்க்கின்ருேம்.'

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடந்த வடஇலங்கை உணவு தானிய மொத்த இறக்குமதியாளர், வியாபாரிகள் சங்கக் கூட்டத்தில் அகில இலங்கை வணிகர்சங்க பொதுச்செயலாளர் திரு. வை. பி. முத்துக்குமாரன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. ஏ. வி. பரமநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. முத்துக்குமாரன் மேலும் கூறியதாவது: இந்த திருத்த மசோதாவினுல் 20 லட்சம் வியாபாரிகளின் தொழில் பெருமளவு பாதிக்கும். இந்த 20லட்சம் பேர்களும் வியாபாரத்தையேதொழிலாகக்கொண்டுள்ளனர். இது அரசாங்கத்தின் தேர்தல் காலக் கொள்கைக்கு முற்றிலும் மாருனது.

சிங்களவர்-தமிழர் என்ற பாகுபாடில்லாமல் வியாபாரிகள் என்ற முறையில் ஒத்துழைத்தால் அதிகநன்மை பெறமுடியும். நாங்கள் அரசாங்க அதிகாரிகளுடன் வியாபாரம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தும்போது, ஒருமுறையாவது வடஇலங்கை வியாபாரிகளை ஒதுக்கிப்பேசியது கிடையாது. அவர்களின் நன்மைக்காகவும்பாடுபட்டுள்ளோம்.

பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவிருக்கும்கூட்டுஸ்தாபன திருத்தமசோதாவை கடுமையாக எதிர்க்கிருேம் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

சங்கத்தின் உபதலைவர் எம். குமாரசாமி பேசும்போது, யாழ்ப்பாணத்தில் கள்ள மார்க்கட்டை ஒழிக்க வியாபாரிகள் ஒற்றுமையாகப் பாடுபடவேண்டும் என்று கூறினுர். நீர்கொழும்பு வியாபாரிகள் சங்க தலைவர் திரு. வி. பி. ஜஸ்டின் சில்வா தமிழில்பேசும்போது வியாபாரிகள் மொத்தவிற்பனவு ஸ்தாபனம் யாழ்ப்பாணத்திற்கு அவசியமெனக் கூறினுர்-

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன் இன்று மாலை இழுக்கப்பட்ட 138-வது தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:—

முதல்பரிசு

31 O 0336 ரூ. 77,900

இரண்டாவதுபரிசு

20 E 0752 ரூ. 31 160

மூன்ருவதுபரிசு

11 F 0033 ரூ. 7,790

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எல்லாரும் இன்பத்தையே நாடுகின்றார்கள். ஆனால் அதை வெளியில் தேடும்வரை அது கிட்டுவதில்லை. ஒவ்வொருவரும் தமக்குள் இருக்கும் சத்யப் பொருளை நாடுவதாயின் அது கைகூடுவதாக இருக்கும்.

— சுவாமிராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு
சித்திரை மீ 8உ (21-4-67)


## கல்முனை கலகம்

கல்முனையில் இரு சமூகங்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டு உயிர்ப் பலியுடன் வீடுவாசல்களையும் சில குடும்பங்கள் இழந்து நிர்க்கதிக்குள்ளாகியிருக்கின்றனர். இத் துரதிர்ஷ்ட சம்பவம் கவலையளிப்பதாகும். செனட்டர் மாணிக்கம் கூறுவதுபோல் கல்முனைச் சம்பவங்கள் மோசமடைவதற்கு அரசியல் தலையீடும் சில அதிகாரிகளின் அசமந்தப்போக்குமே காரணமாக இருந்திருப்பின் இதுபற்றி ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

சமூக ஒற்றுமைக்கும் நல்லுறவுக்கும் கிழக்கு மாகாணம், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் பெயர்பெற்று, ஓர் உதாரணமாகவும் விளங்கிவந்திருக்கிறது. சில தினங்களுக்கு முன் கல்முனைப் பகுதியில் இரு சமூகத்தினருக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டு அது ஒரு பெரும் கலகமாக மாறி பொதுமக்கள் சிலரின் வீடுவாசல்கள் சூறையாடப்பட்டிருப்பதுடன் வீடுகள் சில தீக்கிரையாகியுமிருக்கின்றன. இச் சம்பவங்களுக்கு சில விஷமிகள் பின்னணியிலிருந்து ஆக்கம் அளித்திருப்பதாகக் கூறப்படுகிறது. கல்முனையில் மட்டுமல்ல வேறு எந்தப் பகுதியிலும் இதுபோன்ற சம்பவங்கள் இனியும் ஏற்படாமல் தடுப்பதற்கு சமூக, சமயப்பெரியார்களும் தொண்டர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே சமயம் கல்முனைக் கலகத்துக்கான காரணம் பற்றியும் அதில் அரசியல் தலையீடும், அதிகாரிகளின் கவனக்குறைவும் எந்த அளவுக்குக் காரணமாக இருந்தது என்பது பற்றியும் விசாரணை செய்வதற்கு ஒரு பாரபட்சமற்ற 'கமிஷனை' அரசாங்கம் நியமிக்க முன்வரவேண்டும். பிறர் தலையீடுதான் அங்கு நிலைமை மோசமடைந்ததற்குக் காரணமாயின் சம்பந்தப்பட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கலகத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான நிவாரண உதவிகள் அளிக்கப்படவேண்டியதும் அரசாங்கத்தினது கடமையாகும்,

# உபஉணவுப்பொருள் தட்டுப்பாடுநீக்க வழி

## அரசாங்க அதிபர் மகாநாட்டில் வணிகர் சங்ககுழு யோசனை

யாழ்ப்பாணம் வெள்ளி

இலங்கையில் தற்பொழுது 47 இடங்களிலுள்ளதுபோல் யாழ்ப்பாணத்திலும் வியாபாரிகள் மொத்த விற்பனவு ஸ்தாபனத்தை நிறுவி, அதன் மூலம் உப உணவுப் பொருட்களை கடைகளுக்கு விநியோகிக்கவேண்டும்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நேற்றுக் காலை நடந்த உணவுப் பிரச்னை பற்றிய மகாநாட்டில் அகில இலங்கை வணிகர்கழகச் செயலாளர் திரு. முத்துக்குமாரன் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

இம்மாநாட்டில், உதவு உணவுகட்டுப்பாட்டதிகாரி. தலைமை நிலைய காரியாதிகாரி, வடஇலங்கை மொத்த வியாபாரிகள், இறக்குமதியாளர் சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் உப உணவுப்பொருட்கள் மக்களுக்கு தட்டுப்பாடின்றிக் கிடைக்கக்கூடிய வழிவகைகள் பற்றியும் ஆராயப்பட்டன. வியாபாரிகள் மொத்த விற்பனவு ஸ்தாபனம் மூலம் எல்லாரும், உப-உணவுப்பொருட்கள்பெற வசதி செய்யமுடியும் என்று மகாநாட்டில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

மொத்த விற்பனவு ஸ்தாபனம் நிறுவுவது பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள வியாபாரிகளைக் கூட்டி அவர்களது ஆலோசனையைக் கேட்டபின் முடிவுசெய்வதாகவும் இதுபற்றி காரியாதிகாரிகளிடமும் ஆலோசனை பெறவிருப்பதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# ஆசியாவுக்கு ஒரு பொதுச்சந்தை

## அண்ணா யோசனை

சென்னை, ஏப்ரல் 20

ஆசியாவில் ஒரு பொது மார்க்கெட் நிறுவுவது பற்றிப் பொருளாதார நிபுணர்கள் சிந்திக்க வேண்டுமென தமிழக ராஜிய முதல் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகள் தன்னிறைவு அடைவதற்கும், பொருளாதாரக் கட்டுக்கோப்பைத் தம்மிடையே வளர்ப்பதற்கும் இது பெரிதும் உதவலாம் என்றார் அவர்

1965-ம் ஆண்டின் சிறந்த ஏற்றுமதியாளருக்கு விருதுகள் வழங்கும் வைபவத்தில கலந்து கொண்டு பேசுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்குப் பிராந்தியத்தில் பர்ரத சரக்குகளுக்கு விரிவான ஒரு மார்க்கெட்டை ஏற்படுத்துவது பற்றியும் பொருளாதார நிபுணர்களும், அதிகாரிகளும்தகுந்த நடவடிக்கைகள் எடுக்க முயற்சிசெய்யவேண்டுமெனவும் அவர் மேலும் கூறினார்.

அபிவிருத்தி அடையாத, அடைந்த, அடைந்து வரும் ஆசிய நாடுகளின் பொருளாதாரத்துக்கு, உத்தேச ஆசிய பொது மார்க்கெட் பெரிதும் உதவும் என முதல் மந்திரி கருத்துத் தெரிவித்தார்.

அபிவிருத்தி யடைந்துள்ள நாடுகளுக்கு, அவற்றின் வளர்ந்து வரும் தொழில்களுக்குத் தேவையான பொருட்களை வழங்கும் இப்பொது மார்க்கெட்வழிவகை செய்யலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## அடினோர் மறைவு

மேற்கு ஜெர்மன் அதிபராகப் பல வருடங்கள் பணியாற்றிவரும் ஐரோப்பாவின் முதுபெரும் ராஜதந்திரி டாக்டர் கொன்ராட் அடினோரின் மறைவு ஐரோப்பாவுக்கு மட்டுமல்லாது அகில உலகுக்குமே பெருநஷ்டமென்று கூறலாம்.

91 வயதான டாக்டர் அடினோர் நிறை வாழ்வு வாழ்ந்தவர். உலக யுத்தத்தில் சீர்குலைந்தமேற்கு ஜெர்மனியை மீண்டும் முன்னேற்றத்துக்குக் கொண்டுவந்து உலகில் மீண்டும் அது ஒரு சக்தி வாய்ந்த நாடாகத் திகழ்வதற்கு உழைத்த சிறந்த தேசபக்தர் அவர். பிரான்சுடன் மீண்டும் நட்புறவு பூண்டு ஐரோப்பிய நாடுகள் தம்மை நம்பியே வாழக்கூடிய நிலையை உருவாக்கியவர் டாக்டர் அடினோர். மேற்கு ஜெர்மன் அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் நாட்டின்முன்னேற்றத்துக்காக உழைத்துவந்துள்ள டாக்டர் அடினோரின் பிரிவு உலகைப் பொறுத்தவரையில் திரு. வின்ஸ்டன் சர்ச்சிலுக்குப் பின்னர் ஏற்பட்ட மற்றொரு பேரிழப்பாகும். அடினோர் மறைந்தாலும் அவரது கடும் உழைப்பும் தேசபக்தியும் ராஜதந்திரமும் உலகில் என்றும் நிலைத்து நிற்கும்.

## கலகக்காரர் கைது

### கிளேயின் ஆதரவாளர்கள்

லூயிவில், ஏப்ரல் 20

இம்மாத இறுதியில் அமெரிக்க ராணுவத்தில் சேரும்படி வற்புறுத்தப்படும் உலக குத்துச்சண்டை மாவீரர் காஸியஸ் கிளே [முகம்மதலி] இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் 'நான் முன்பின் அறியாத மக்களை விடுவிப்பதற்காக வியட்னாமுக்குப் போய்என் உயிரைக் கொடுக்கச்சொல்லுகிறார்கள்' என்று கூறினார்.

'இங்கே எமது சொந்த ஊரில் எமக்கு விடுதலை கிடையாது. இன்னொரு நாட்டு மக்களின் விடுதலைக்காக எங்களை உயிர்ப்பலி கேட்கிறார்கள்' என்றார் கிளே.

கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்தில் நீக்ரோ தலைவர்கள் உட்பட நாற்பது பேர் கைதுசெய்யப்பட்டனர்.

## இலங்கைக்கு அதிக நிதியுதவி

டோக்கியோ, ஏப்ரல் 20

இலங்கைக்கு உதவியளிக்கும் ஏழு நாடுகளின் கூட்டுச்சபை, இலங்கைக்கு இவ்வாண்டில் 5 கோடி அமெரிக்க டொலர் வரை அதிகமான உதவி அளிப்பதெனத் தீர்மானித்துள்ளது.

தேயிலை, றப்பர் ஆகியவற்றின் விலைகள் வீழ்ச்சியுற்றதால் இலங்கையின் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்தே நிதி உதவி அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 'செயல்வீரர் குறைந்துவிட்டனர்'

உடுப்பிட்டி, வியாழன்

''விருந்து வைபவங்கள் அநாவசியமானவை என்று சிலர் கருதக்கூடும். தமிழினத்தின் பண்பாட்டில் விருந்து வைபவம் பண்டைய சிறப்பு வாய்ந்தது. இராமாயணம், மகாபாரதம் முதலிய புராணநூல்களில் விருந்தோம்பி வாழும் சிறப்புப் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தற்பொழுது மேடைப் பேச்சாளர்கள் அதிகரித்திருக்கின்றனரே யன்றி செயல் வீரர்களிருப்பது அரிதாகி விட்டது. சொல்லித் திரிபவர்கள் ஒருபோதும் செயலில் இறங்க மாட்டார்கள். ஆலயப்பிரவேசத்தைச் சாக்காக வைத்து அரசியல் வேட்டையாட எண்ணுவது பிழையானது. மனமாற்றம் மூலமே ஆலயப்பிரவேசம் செய்யலாம்.''

இவ்வாறு வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரிப் பழையமாணவர் சங்கத்தின் 6-வது ஆண்டுவிழாவும், வருடாந்த விருந்துபசாரமும் கல்லூரி மண்டபத்தில் அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னைநாள் உதவி மாகாண அதிபர் முதலியார் செ. சின்னத்தம்பி பேசுகையில் கூறினார். மேற்படி கல்லூரியின் முன்னாள் அதிபரும் பழைய மாணவர்சங்க போஷகருமான திரு. எஸ். வீரசிங்கம் உட்பட வேறு பலரும் பேசினார்கள்.

செயலாளர் திரு. எம். பி. அண்ணாச்சாமி நன்றி கூறினார்.

[5-ம்கலத்தொடர்ச்சி]

வும் தெரிவித்தார். இன்றேல் பெரு நஷ்டம்தானாம். இங்கும் நல்ல நாடகங்களுக்கு மக்களிடையே அதிகதாகமுள்ளது. நாடகத்திலே பல கலைகளும் சேர்ந்திருப்பதால், நாடக வளர்ச்சி மூலம் பல கலைகளும் வளரலாம். இங்கும் தமிழ் நாடகங்கள் வளர அரசாங்கமும், பொது மக்களும் உதவ அதிக இடமுண்டு.

உரமென்னும் பொருளானை உருகிலுள்ளுறைவானைச், சிரமென்னுங் கலனைச் செங்கண் மால்விடையானை, வரமுன்னம் அருள் செய்வான் வன்பார்த்தான் பனங்காட்டூர்ப், பரமன் எங்கள் பிரானைப் பரவாதார் பரவென்னே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

['ஞானம்' என்று சொல்லப்படும் பொருளாய் உள்ளவனும், உள்ளம் அன்பாய் உருகினால், அதன் கண் நீங்காது தங்குகின்றவனும், தலை ஓடாகிய உண்கலத்தை உடையவனும், சிவந்த கண்களை யுடைய பெரிய இடப வாகனத்தை உடையவனும் மேலானவனும் ஆகிய திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளியிருக்கின்ற எங்கள் இறைவனைத் துதியாதவரது துதிதான் என்னே!]

# ஐயாறன் எழுதுகிறார்

'தணியாத தாகம்' என்ற ஒரு சரித்திர கற்பனை நாடகம் இம்மாதம் 30-ம் திகதி யாழ். நகர மண்டபத்தில் நடப்பதாக ஓர் அன்பர் ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கொண்டுவந்து கொடுத்தார். ''பதினேழாம் நூற்றாண்டிலே ஈழத்தின் தமிழ்ப் பகுதிகள் பலவற்றை ஆதிக்க வெறி பிடித்த அன்னியனும் டச்சுக்காரன் ஆக்கிரமித்து எதேச்சாதிகார ஆட்சி செலுத்திய காலத்திலே வன்னிவள நாட்டின் தலைசிறந்த ராசதானியாக விளங்கிய பனங்காமத்தின் மன்னன் கயிலை வன்னியன் விடுதலை வேட்கை தணியாமல் செங்கோல் செலுத்தி வருகிறான். அன்னியனின் அடிபணியா வன்னி மன்னனின் அஞ்சாநெஞ்சத்தைக் கண்டு சூழ்ச்சி செய்கிறான் வஞ்சக டச்சுக் கவர்ணர். சூழ்ச்சி வலை வீசப்படுகிறது. சூழ்ச்சி பலித்ததா! இதய தாகம் தணிந்ததா? விடை காண வேண்டுமா? விரையுங்கள் நாடகம் பார்த்திட'' என்று அத்துண்டுப் பிரசுரத்தில் பார்த்ததும், நாடகத்தைக் காணவேண்டுமென்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. அந்நிய கொடுங்கோல் ஆட்சியிலே நடந்த கொடுமைகளும் நமது முன்னோர்கள் பட்ட துன்பங்களும் கொஞ்சமன்று. காலம் மாறிவிட்டது. இன்று நாம் அரசியல் சுதந்திரத்துடன் வாழ்வதெனில், அதற்கு நம் முன்னோர்கள் செய்த அரும் பெரும் தியாகங்களேயாகும்.

இவற்றை ஞாபகப் படுத்திக் கொண்டாலே, நாம் பெற்றுள்ள சுதந்திரத்தின் அருமையையும் அதைக் காத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தையும் நாம் உணரலாம்.

மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கத்தைச் சேர்ந்த கலைஞர்கள் தான் இதற்கு ஏற்பாடு செய்துள்ளதாயும், எல்லா மதக் கலைஞர்களும் இதில் ஒத்துழைப்பதாகவும் அறிய மகிழ்ச்சியாக இருந்தது. இக்கலைஞர்கள் ஏற்கெனவே நாடகப் போட்டியில் இலங்கைக் கலைக்கழகத்தின் முதற்பரிசைப் பெற்றவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உதவி நாடகம் நடத்தும் நோக்கம், திருக்கேதீச்சரம் செல்லும் அடியார்கள் மன்னாரிலே தங்கி இருக்க ஒரு தர்ம நிலையம் கட்டுவதற்குத்தானாம். இப்போது, மன்னாரில் தங்கி இருக்க வசதியின்றி திருக்கேதீச்சர யாத்திரிகர்கள் பெரிதும் கஷ்டபடுவதாயும் இப் புதிய கட்டிடம் அக்குறையை நிறைசெய்யுமென்றும் அச் சங்கத்தார் நம்பிக்கை தெரிவித்து, இப் பணிக்கு உதவ வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இந்த வேண்டுகோள் வீண்போகாதென்றே நம்புகிறேன்.

ஃ ஃ ஃ

சென்னையிலிருந்து வந்த ஓர் அன்பரை கொழும்பில் சந்தித்தேன். மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபையிலே முன்னரெல்லாம் மாதத்தில் மூன்று சங்கீதக் கச்சேரிகளும் ஒரு நாடகமும் நடக்குமாம். ஆனால் இப்போது சங்கீதக் கச்சேரிக்குக் கூட்டமே வருவதில்லை என்றும் நாடகம் நடத்தினால்தான் மக்கள் ஆதரிப்பதாயும் ஆகவே மாதத்தில் மூன்று நாடகங்களும் ஒரு சங்கீதக் கச்சேரியும் நடத்துவதாக

(4ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்விலக்க பிராந்தியத்திலிருந்து பத்து மைல் தூரம் வாபஸ்

## வியட்னும் சமாதானத்துக்கு டீன் ரஸ்க் புதிய யோசனை

வாஷிங்டன், ஏப்ரல் 20

**வியட்னுமில் போர் விலக்குப் பிராந்தியத்திலிருந்து வடக்கே 10மைல் தூரம் வடவியட்னும் துருப்புகள் பின்வாங்கினுல், தென்வியட்னும், அமெரிக்க துருப்புகளும் அதே போல் தெற்கே 10 மைல் தூரம் பின்வாங்கத் தயாராகவிருப்பதாக அமெரிக்க வெளி உறவு மந்திரி திரு. டீன் ரஸ்க் இங்கு தெரிவித்துள்ளார்.**

இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் தென்கிழக்காசிய ஒப்பந்த நாடுகள் கூட்டத்தில் பேசுகையிலேயே, திரு. டீன்ரஸ்க் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

### முதல் நடவடிக்கை

இப்படிப் போர் விலக்குப் பிராந்தியத்திலிருந்து இரு திசைகளிலும் 10 மைல் தூரம் துருப்புகளை வாபஸ் பெறுவது, ஒரு முழுமையான வியட்னும் சமாதான உடன்படிக்கைக்கு முதல் நடவடிக்கையாக அமைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத் துருப்பு வாபஸ், சர்வதேச கமிஷன் ஒன்றின் மேற்பார்வையின் கீழ் நடைபெறலாமென ஆலோசனை தெரிவித்த திரு. ரஸ்க், அமெரிக்கா வடவியட்னும் மீது குண்டுவீச்சை நிறுத்துவது பற்றி எதுவும் பிரஸ்தாபிக்கவில்லை.

### பிரிட்டிஷ் மந்திரி கருத்து

இதே மாநாட்டில் பங்குபற்றும் பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண், வியட்னுமில் இராணுவ நடவடிக்கைகளில் பிரிட்டன் ஈடுபடாது விலகியிருப்பதே சிறந்தகொள்கையாகுமென்பதைக் கூடியிருந்த மற்றநாட்டு மந்திரிகளிடம் வலியுறுத்தினுர். பிரிட்டன் நேரடியாகப் பங்குபற்றுவது, வியட்னும் போரை நிறுத்த அது எடுக்கும் சமாதானமுயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கலாம் எனவும் திரு. பிரவுண் கூறினுர்.

### இலங்கை தூதுவர் நடவடிக்கை

இதற்கிடையில், புதுடில்லியிலுள்ள இலங்கையின் இந்திய ஹைகமிஷனர் திரு. எச். எஸ். அமரசிங்க, வியட்னும் சம்பந்தமான தமது பிரதமரின் சமாதான திட்டம்பற்றி டில்லியிலுள்ள வடவியட்னும்ராஜ்யப் பிரதிநிதியைச் சந்தித்து விரிவாகப்பேசப்போவதாக அறிவித்துள்ளார்.

இலங்கைப் பிரதமர் திரு. டட்லிசேனநாயக்காவின் திட்டத்தின்படி, வியட்னும் போரில் சம்பந்தப்பட்ட கட்சிகளான வடக்கு, தெற்கு வியட்னும், வியட்காங்கியர், அமெரிக்கா ஆகியோர் ஒரு மாநாட்டில் சந்தித்துப்பேசுவதே முதல் நடவடிக்கையாகும். அதன் பின்னர் விரிவானசமாதான ஆலோசனைகள் ஆராயப்படும்.

# அமெரிக்க 'சர்வேயர் 3' சந்திரனில் இறங்கியது

வாஷிங்டன், ஏப்ரல் 20

அமெரிக்கா சந்திரனுக்கு அனுப்பிய விண்வெளிக்கலமான 'சர்வேயர் 3' இன்று சந்திரனில் மெதுவாக சென்றிறங்கியது. மணித்தியாலத்துக்கு 6,000 மைல் வேகத்தையும் ஒரு கட்டத்தில் அடையும் இவ்விண்வெளிக்கலம், மணிக்கு 3 மைல் வேகத்திலேயே சந்திரனில் போய் மெதுவாக இறங்கியது.

அமெரிக்கா சந்திரனுக்கு அனுப்பியுள்ள விண்வெளிக் கப்பல்களில் மிகவும் நவீனமானதெனக் கருதப்படும் 'சர்வேயர்-3', சந்திரனுக்கு அமெரிக்கா அனுப்பியுள்ள இரண்டாவது மனிதரற்ற விண்வெளிக்கலமாகும். முதல் முறை அனுப்பியதும் சந்திரனில் சென்றிறங்கி இருந்த்து.

'சர்வேயர்-3' விண்வெளிக்கலம் துளை கருவியும், டெலிவிஷன் கமெராவும் இணைக்கப்பட்டதாகும். சந்திரனில் இப்போது இறங்கியுள்ள அது, ஏற்கனவே சந்திரனின்மேற்பரப்பின் படங்களை டெலிவிஷன் கமெரா மூலம் அனுப்பி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனுல்சந்திரனின் மேற்பரப்பைத் துளைக்கும் முயற்சியில் அதுஇதுவரை ஈடுபடவில்லை இன்று பிற்பகல் அவ்வேலையில் அது ஈடுபடலாமெனக் கூறப்படுகிறது.

சந்திரனில் மனிதன் இறங்குவதைச் சுலபமாக்கும் நோக்கத்துடன், சந்திரனின் மேற்பரப்பைத் துளைத்து ஆராய்வதே 'சர்வேயர்-3' மேற்கொண்டிருக்கும் பிரதான வேலையாகும்.

# இந்திராவின் காரியதரிசி ஜோன்சனை சந்தித்தார்

வாஷிங்டன், ஏப்ரல் 20

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் காரியதரிசி திரு. எல். கே. ஜா, அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜோன்சனை இங்கு சந்தித்துப் பேசினுர்.

அணு ஆயுதம் பரவுதலைத் தடுக்கும் உத்தேச உடன்படிக்கை பற்றியும், சீன அபாயத்துக்கெதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் அவர் திரு. ஜோன்சனுடன் ஆலோசனை நடாத்தினுர்.

அணுஆயுதப்பரவல் தடுப்பு உடன்படிக்கை பற்றித் திரு. ஜா பத்திரிகையாளர்களிடம் குறிப்பிடுகையில், அது ஏற்றத்தாழ்வின்றிச் சமசீராக இருக்கவேண்டுமென அவர் கூறினுர்.

அணு ஆயுதம் பரவுதலைத் தடுக்கும் உடன்படிக்கை பற்றி பாரதமும் ஐக்கிய அமெரிக்காவும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வட கிழக்கு இந்தியாவில்புயல் 4 பேர் மரணம்

புதுடில்லி, ஏப்ரல் 20

வட கிழக்கு இந்தியாவில் பல பகுதிகளில் நேற்றுக் கடும் புயல் வீசியது. 4 பேர் மரணமானதாகவும், பல இடங்களிலும் மின்சார விநியோகம் தடைப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உயிரிழந்தோர் தொகை அதிகரிப்பு

கராச்சி, ஏப்ரல் 20

கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள பரீத்பூரில் நேற்றுச் சுற்றிச் சுழன்று வீசிய கடும் புயற்காற்றினுல் உயிர் இழந்தவர் தொகை 68 ஆக உயர்ந்துள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2,000 வீடுகள் இடிந்து வீழ்ந்ததாகவும், ஏறத்தாழ 25,000 பேர் வீடிழந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. பயிர்களும் நாசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## பொறுமை அவசியம் என்கிருர் யுதாண்ட்

ராவல்பிண்டி, ஏப்ரல் 20

ஐ. நா. பொதுக்காரியதரிசியுதாண்ட், பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுடனும், பாகிஸ்தான் வெளியுறவு மந்திரியுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தினுர்.

ராவல்பிண்டிக்குப் புறப்படுவதற்கு முன், லாகூர் விமான நிலையததில் வைத்துப் பத்திரிகையாளரிடம் பேசிய போது, இந்திய—பாகிஸ்தான் பிரச்னைகளைத் தீர்க்க இருசாராரும் 'பொறுமையும், சகிப்புத்தன்மையும் காட்டவேண்டியது அவசியம்' எனக்குறிப்பிட்டார்.

## ஈரான்—பாரத நட்புறவு

டெஹ்ரான், ஏப்ரல் 20

ஈரானுக்கு தற்போது விஜயம் செய்துள்ள இந்திய வெளியுறவு மந்திரி திரு. சக்ளா, பாரதத்துக்கும் ஈரானுக்குமிடையேயான தொன்மைக்காலத் தொடர்புகள் தமதுவரவால் மேலும் வலுப்பெறுமெனத் தாம் நம்புவதாக இங்கு நம்பிக்கை தெரிவித்தார். இதே கருத்தை ஈரான் வெளியுறவு மந்திரியும் வலியுறுத்தினுா.

## கனடா வர்த்தக தூதுகோஷ்டி

புதுடில்லி, ஏப்ரல் 20

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள கனடா வர்த்தகத் தூதுகோஷ்டி, மத்திய வர்த்தக மந்திரி திரு. தினேஷ் சிங்கைச் சந்தித்துப் பேசியது.

கனடாவுக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள வர்த்தகத் தொடர்புகளை விஸ்தரிப்பது பற்றி அது மந்திரியுடன் ஆலோசனை நடத்தியது.

## கேரள மந்திரிகளுக்கு மாதம் ரூபா 800

திருவாங்கூர், ஏப்ரல் 20

கேரளா மந்திரிகள், தமது சம்பளமாக மாதம் ரூ. 800 முற்றிலுமாகப் பெற்றுக்கொள்வார்கள் என கேரள முதல் மந்திரி திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் இங்கு அறிவித்துள்ளார்.

# அடினேரின்இறுதிச்சடங்கில் பலபிரமுகர்கலந்துகொள்வர்

பொன், ஏப்ரல் 20

காலஞ்சென்ற முன்னுள் மேற்கு ஜெர்மன் அதிபர் திரு. கொன்ராட் அடினேரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள உலகின் பல பகுதிகளிலுமிருந்து பிரமுகர்கள் ஜெர்மனிக்கு வந்து சேருவார்கள்.

இவர்களில் அமெரிக்க ஜனுதிபதி ஜோன்சனும் ஒருவராவர். அவர் அமெரிக்க ஜனுதிபதியாகிய பின்னர் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்வது, இதுவே முதற்தடவையாகும். பிரிட்டிஷ் பிரதமர் வில்சன், பிரான்சின் அதிபர் டி கோல், இத்தாலியப் பிரதமர் ஆகியோரும் அடினேரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வரென எதிர் பார்க்கப்படுகிறது. இவ் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

### புகழ் மாலைகள்

காலஞ்சென்ற அடினேர், ஐரோப்பாவின் சிறந்த அரசியல் அறிஞர் என இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இங்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் கூறியுள்ளார்.

'ஜெர்மனியின் நலனுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த பெரியார்" என இந்திய உபராஷ்டிரபதி டாக்டர்சஹீர்ஹுசேன் தெரிவித்துள்ளார்.

'ஐரோப்பாவின் முதுபெரும்அரசியல்வாதி' எனக் காலஞ்சென்ற அடினேரை வர்ணித்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, 'இரண்டாவது உலக யுத்தத்தின் நாச விளைவுகளிலிருந்து ஜெர்மனியைக் காப்பாற்ற உழைத்தவர்' எனவும் குறிப்பிட்டார்.

மற்றும் அமெரிக்க ஜனுதிபதி ஜோன்சன், இஸ்ரேல் பிரதமர், எலிசபெத் ராணி, அதிபர்அயூப்கான், பிரெஞ்சு ஜனுதிபதி டி கோல் ஆகியோரும் அனுதாபச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

# பீகாருக்கு மே. வங்காளம் விதைநெல் அன்பளிப்பு

கல்கத்தா, ஏப்ரல் 20

பீகார், மேற்கு வங்காள முதன்மந்திரிகள், பீகார் உணவு நிலைமை பற்றிக் கல்கத்தாவில் கூடிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினுர்கள்.

பீகார் முதன்மந்திரி திரு. சின்ஹா, தமது ராஜ்யத்துக்கு விதை அரிசியும், மற்றும் தான்யவகைகளும் அளித்துதவுமாறு மேற்கு வங்காள முதல்மந்திரி திரு. அஜொய்கோஷிடம் கேட்டுக்கொண்டார்.

பீகாருக்கு 5,000 மெட்ரிக் தொன் விதை நெல்லை அன்பளிப்பாகத் தருவதற்கு திரு. அஜொஸ்கோஷ் ஒப்புக் கொண்டார்.

## செக். - பாரத உடன்படிக்கை

பிராக், ஏப்ரல் 20

பிராக்கில் ஒரு வாரகாலம் தங்கி, செக்கோஸ்லாவாக்கிய வர்த்தக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய இந்திய வர்த்தக தூதுகோஷ்டி, விரிவான வர்த்தக உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளது.

## சென்னை ஆஸ்பத்திரியில் புதுப்பிரிவு

சென்னை, ஏப்ரல் 20

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் மண்டைக்காயங்களுக்கெனஒரு விசேஷ பிரிவு நிறுவப்பட்டிருக்கிறது. இதற்கு ரூபா 4 லட்சம் செலவாகியுள்ளது. இப்புதிய பிரிவை யூனியன் ராஜ்ய மந்திரி டாக்டர் சந்திரசேகர் திறந்துவைத்தார்.

## இந்தியாவுக்கு 85 லட்சம் டாலர்

புதுடில்லி, ஏப்ரல் 20

ஐ. நா உணவு விவசாய ஸ்தாபனம் 5 ஆண்டு காலத்தில் இந்தியாவுக்கு 85 லட்சம் டாலர் உதவியளிக்கத் தீர்மானித்துள்ளது. இதில் பெரும் பகுதி விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## இடமாற்றம்

துணுக்காய், வியாழன்

துணுக்காய் காரியாதிகாரி கந்தோரில் பிரதம லிகிதராக கடமை புரிந்த திரு. என். கனகலிங்கம் யாழ்ப்பாணம் கச்சேரி பென்சன் பிரிவுக்கு பிரதம லிகிதராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## மது அருந்துகையில் தாக்கப்பட்டார்

உடுப்பிட்டி, வியாழன்

மதுவருந்தச் சென்றவர் கோடரியினுல் தாக்கப்பட்டுப்படுகாயமடைந்தார். துன்னுலை தெற்கு என்னுமிடத்திலுள்ள வேலுப்பிள்ளை கந்தையா [வயது 37] என்பவர் பலத்த காயங்களுடன் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றுர்.

இச்சம்பவம் பற்றி விசாரணை செய்த பருத்தித்துறைப் பொலிசார் சந்தேகத்தின்மீது வ. அரியகுட்டி, அ. மசிலாமணி ஆகிய இருவரையும் கைதுசெய்துள்ளதாக அறியப்படுகிறது. பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

## மண்கும்பான் பள்ளி வாசல் வீதி திருத்த வேலைகளுக்கு எம். பி. உறுதி

ஊர்காவற்றுறை, வியா.

மண்கும்பான் பள்ளிவாசல் வீதியைப் போக்குவரத்து வசதியுடன் திருத்தியமைக்குமாறு மண்கும்பான் பள்ளிவாசல் பரிபாலனசபையினர் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினத்தைக் கேட்டுக்கொண்டனர். தனது தொகுதியிலுள்ள இடங்களுக்கு பல வீதி திருத்த வேலைகள் செய்யவேண்டியிருப்பதாகவும், மண்கும்பான் சந்தியிலிருந்து பள்ளிவாசலூடாக ஊர்காவற்றுறை செல்லும் பகுதி வீதி வேலைகளை, மண்டைதீவுப் பகுதி வேலை முடிவடைந்தவுடன் கவனித்து நடவடிக்கை எடுப்பதாக எம். பி. உறுதியளித்துள்ளார்.

## வரவேற்பு

சங்கானை, வியாழன்

சண்டிலிப்பாய் நாகபூஷணி அம்பாள் கோவிலில் எதிர்வரும் 23-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு நல்லூர் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளுக்கு ஒரு வரவேற்பு நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இிரிக்கட் போட்டி

# 10 விக்கட்டுகளால் தெற்குதோல்வி

## சாம்பியன் போட்டிக்கு வடக்கு கோஷ்டி தெரிவு

யாழ்ப்பாணம், வியா.

இலங்கை பாடசாலைகளின் கிரிக்கெட் போட்டியில் சாம்பியன்களுக்கான அரையிறுதிப் போட்டியில் வடமாகாணப் பாடசாலைக் கோஷ்டியும், தென்மாகாணப் பாடசாலைக் கோஷ்டியும், யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மோதின. இப்போட்டியில் வடமாகாணக் கோஷ்டி பத்து விக்கெட்டுகளால் தென் மாகாணக் கோஷ்டியை தோற்கடித்தது.

முதலில் துடுப்படியை ஆரம்பித்த வடமாகாணக் கோஷ்டி, ஆரம்பத்தில் தனது துடுப்படியை மிக மந்தமாகவே ஆரம்பித்தது.

வடமாகாணக் கோஷ்டி தனது முதல் நான்கு விக்கெட்டுகளையும் இழந்த போது 21 ஓட்டங்களை மாத்திரமே எடுத்திருந்தது. அதன்பின் துடுப்படியை ஆரம்பித்த இரட்டையராகிய ஏபரகாமும், ஜகதீசனும் மிக வேகமாக ஓட்டங்களை எடுக்க ஆரம்பித்தனர். ஏபரகாம் ஆட்டமிழக்கும் போது 84 ஓட்டங்களையும், ஜகதீசன் ஆட்டமிழக்கும் போது 42 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். வடமாகாணக் கோஷ்டி தனது சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 242 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

தென்மாகாணக் கோஷ்டி தனது துடுப்படியை ஆரம்பித்து முதல்நாள் ஆட்டம் முடியும்போது ஆறு விக்கெட்டுகளை இளந்து மொத்தம் 100 ஓட்டங்களை எடுத்திருந்தது. இரண்டாம்நாள் போட்டி ஆரம்பித்து 40 நிமிடங்களுக்குள் தென் மாகாணக் கோஷ்டி தனது மிகுதி நாலு விக்கெட்டுகளையும் இளந்து மொத்தம் 136 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் மிராண்டா 39 ஓட்டங்களை எடுத்திருந்தார். வடமாகாணக் கோஷ்டி பந்தெறி வீரர்களாகிய பெனடிற் 37 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும், லூயிஸ் 36 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்கள்.

தென். மாகாணக் கோஷ்டி தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆரம்பித்து சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 119 ஓட்டங்களை எடுத்திருந்தனர். இதில் பந்தெறி வீரர்களாகிய பெனடிற்றினதும் லூயிசினதும் பந்து வீச்சு மிக சிறப்பாக காணப்பட்டது. பெனடிற் 44 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளையும், லூயிஸ் 3 விக்கெட்டுகளையும், சூரியகுமார் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

வடமாகாணக் கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸில் விக்கெட்டுகள் எதுவும் இழக்காமல் 17 ஓட்டங்களை எடுத்து, தென் மாகாணக் கோஷ்டியை 10 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று, இறுதி 'சாம்பியன்' போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டிக்கு திருவாளர்கள் சிங்கராயரும், பூபாலும் மத்தியஸ்தம் வகித்தனர்.


**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர்-விஜயகுமாரி
நடித்த
**காக்கும் கரங்கள்**

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ். எஸ். ஆர் -விஜயகுமாரி
நடித்த
**ஆனந்தி**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 2 காட்சிகள்
போயா தினங்களில்
3 காட்சிகள்
எம்.கே. ராதா-புஷ்பவல்லி
நடித்த
**சம்சாரம்**

REGAL JAFFNA
Catherine Deneuve
&
Ian Hendry
in
REPULSION
Time: 4-15, 7-00 9-45 p. m.


### நெல்விளைச்சல் போட்டி முடிவுகள்

சங்கானை, வியாழன்

கமத்தொழிற் பகுதியினரால் வலி மேற்குப்பகுதியில் இவ்வருடம் நெல்விளைச்சல் போட்டி நடாத்தப்பட்டபோது சண்டிலிப்பாயைச் சேர்ந்த திரு. ஆர். சரவணமுத்து [வயது 72] முதலாவது இடத்தையும், திரு. எம். அமரசிங்கம்[வயது 60] இரண்டாம் இடத்தையும். மூளாயைச்சேர்ந்த திருஎஸ். ரி. குமாரலிங்கம் மூன்றும் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். இவர்கள் முறையே ஏக்கர் ஒன்றுக்கு யப்பானியமுறைப்படி நிரை நாற்று நாட்டு 192.68 புசலையும் யப்பானிய முறைப்படி குளிநெல்நட்டு 102.5 புசலையுப நாட்டு வழமைப்படி நாற்றுநட்டு 86 5 புசலையும் அறுவடை செய்தனர் இதற்கான பரிசில்கள் யாழ். கைத்தொழில் கமத்தொழில் பொருட்காட்சியின் போது வழங்கப்படும். 1-ம், 2-ம் இடத்தைப் பெற்றவர்கள் சண்டிலிப்பாய் ஆலங்குளாய் பயிற்செய்கைக்குழுதலைவரும், காரியதரிசியுமென்பது குறிப்பிடத்தக்கது.

### ஆனந்தாவுக்கு வெற்றி

புதுக்குடியிருப்பு, வியா.

புதுக்குடியிருப்பு கிராமச் சபையால் நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிஆட்டத்தில் முள்ளியவளை விளையாட்டுக் கழகத்திற்கும் புதுக்குடியிருப்பு ஆனந்தா பச்சைக் கோஷ்டியினருக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் 15-6 — 15-7 புள்ளிகளால் ஆனந்தா பச்சைக் கோஷ்டியினர் வெற்றி பெற்றனர்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை கிராம சபைத் தலைவர் திரு. சி. சிதம்பரப்பிள்ளை வழங்கினார்.

### விவசாயப்படை தெரிவு

துணுக்காய், வியாழன்

துணுக்காய் காரியாதிகாரி பிரிவிலிருந்து விவசாயப் படையில் சேரவிண்ணப்பித்தோர்களுக்கான நேர்முகப்பரீல்சை இம்மாதம் 15-ம் திகதி புதிய காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்துவின் தலைமையில் நடாத்தப்பட்டது.

விண்ணப்பகாரர்களுள் அநேகர் ஏற்கனவே கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள வாலிபர்களாவர். சிலர் கமத்தொழில் பாடசாலையிற்சி பெற்றுள்ளனர்.

இப்பகுதியில் கடிதங்கள் பட்டுவாடா செய்யப்படுவதில் உள்ள குறைபாட்டால் சிலர் இந்த நேர்முகப் பரீட்சைக்குச் சமூகம் அளிக்க முடி[illegible] நேர்ந்துள்ளதெனத் தெரிகிறது.


**5-வது வெற்றி வாரம்**

| | |
|---|---|
| **தீவொளி** [நுவரெலியா] | **இங்ஸ்லி** [கொழும்பு] |
| **வெலிங்டன்** [யாழ்ப்பாணம்] | **விஜிதா** [ஹட்டன்] |

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விளிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

**ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி**
**மனோகர், அசோகன், வசந்தா,**
**தங்கவேலு, மனோரமா, கருணாநிதி**
மற்றும் பலர் நடிக்கும்

# இரு வல்லவர்கள்


### நாளை சாம்பியன் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்பு வடக்கு பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டிக்கும் வடமாகாணப் பாடசாலைகள் தெரிவுக்கோஷ்டிக்கும் இடையேயான இலங்கைப் பாடசாலைகளின் சாம்பியனுக்கான கிரிக்கெட் இறுதிப்போட்டி இம்முறை யாழ். ரசிகர்களை எதிர்நோக்கியுள்ளது. இலங்கைக் கோஷ்டியின் பெயர் பெற்ற கிரிக்கெட் புலிகள் கலந்து கொள்ளும் இப்போட்டி 22, ம் 23-ம் திகதிகளில் யாழ்- மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற விருக்கிறது.

இலங்கைக் கோஷ்டியின் அதிவேகப் பந்து வீச்சு வீரரான எஸ். சேனநாயக்கா கொழும்பு வடக்கு கோஷ்டியிலும் யாழ். கோஷ்டியின் அதிவேகப் பந்துவீச்சு வீரர் பெனடிற்றும் இப்போட்டியில் கலந்து கொள்வதனால் ஒருவருக்கு ஒருவர் ஈடுகொடுக்க முடியாத. இவர்களுக்குள் திறமைசாலி யார் என்பதை கிரிக்கெட் ரசிகர்கள் கணிப்பதற்கு இப்போட்டி ஓர் அரியசந்தர்ப்பமாகும்.

### 'ஒற்றுமையை சிலர் குலைக்கின்றனர்'

உடுவில், வியா.

''இலங்கையில் வாழும் சிங்கள-தமிழ் இரு சமூகத்தார்களிடையே தேசிய அரசாங்கம் ஏற்பட்டபின்னர் தேசிய இன ஒற்றுமை வளர்ச்சியுற்று வருகின்றது. இதனைச் சிதைத்துவிடக் கூடாது. அரசியல் செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளும் குறுகிய நோக்கத்தால் இவ்விரு இனத்தின் வளர்ச்சியைச் சிதறடிக்க ஒரு சிலர் முனைந்து வருகின்றனர். இவர்களின் இச்செய்கை தமிழ் இனத்துக்கு மட்டுமல்ல, இங்கு வாழும் எல்லா இனத்திற்கும் குறிப்பாக இலங்கைக்கே எதிர்காலம் ஒளிமிகுந்ததாக இருக்குமா என்ற அச்சத்தை உண்டு பண்ணுகின்றது.

ஆனைக்கோட்டை வள்ளுவர் முன்னேற்ற மன்றக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றபோது உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

வள்ளுவர் முன்னேற்ற மன்றத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அகிலஇலங்கை வள்ளுவர் மகாசபைத் தலைவர் திரு. ஆசீர்வாதம் ஹென்றி உட்பட வேறும் பலர் பேசினர்.

### பந்தடித்த சிறுவன் தாக்கப்பட்டான்

உடுப்பிட்டி, வியாழன்

பந்து விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் புலோலி மேற்கில் நிகழ்ந்துள்ளது. புலோலி மேற்கு, கிராமக் கோர்ட்டடியைச் சேர்ந்த வே. தர்மகுலசிங்கம் என்னும் 16 வயதுச் சிறுவன் இங்குள்ள கோவிலொன்றின் வீதியில் பந்து விளையாடிக்கொண்டிருக்கையில் இருவர் இரும்புக்கம்பியினால் தாக்கியதாகவும் அச்சிறுவன் காயங்களுடன் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருவதாகவும் அறியப்படுகிறது. சந்தேகத்தில் இருவரைப்பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது சம்பந்தமாகப் பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

### ஸ்ரீலங்கா- ஐ. தே. க. ஒற்றுமைப் பேச்சு

கொழும்பு, வியா.

சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றுபடவேண்டுமென்று கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை அண்மையில் கூட்டங்களில் பேசியது பற்றி மார்க்ஸிய வாதிகள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் ஒன்று சேர்ந்தால் நாடு முன்னேற்றம் அடையுமென திரு. இரியகொல்லை பல மேடைகளில் கூறிவந்திருப்பது யாவரும் அறிந்ததே.

### இசை விழா இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அரசடி விநாயகர் ஆலய வீதியில் நடைபெற்றுவரும் ரஸிக ரஞ்சன சபா இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்

5-30 பாட்டு-யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா சங்கீதக் கல்லூரி மாணவிகள், 6-45 பாட்டு—திரு. எஸ். முத்துலிங்கம், 8-00 தலைமையுரை திரு. சதா. ஸ்ரீநிவாசன், 8-15 பாட்டு—திரு. எஸ். கணபதிப்பிள்ளை, 9-30 பாட்டு—திரு. பொன். சுந்தரலிங்கம்.


ராதா மணி மார்க்

# சந்தனுதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச்செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபால இடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே.கே.எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.


''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# 50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்


**50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்**





**அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.**

உங்கள் அடுத்த பெரிய சீட்டிழுப்பு
1967 ஏப்ரல் 27-ந் திகதி பொலனறுவையில் 139-ம் இலக்க சீட்டிழுப்பு நடைபெறும்.


**1-வது பரிசு ரூ. 100,000** அல்லது மேர்ஸிடெஸ் பென்ஸ் 190 காரும் ரொக்கம் ரூ. 50,000/-மும்



**2-வது பரிசு ரூ. 40,000** அல்லது புதிய வாக்ஷால் விக்டர் காரும் ரொக்கம், ரூ. 25,575/-மும்



**3-வது பரிசு ரூ. 10,000** அல்லது புத்தம்புதிய போர்ட் ட்ராக்டர் [கம்பெனிபட்டியலில் கண்டுள்ள விலை ரூ. 14,000/-மாகக் குறிப்பிடப் பட்டிருக்கும் இந்த ட்ராக்டரை மெஸர்ஸ் சத்தியாவதி ஸ்டோர்ஸ் & மோட்டார் ட்ரான்ஸ்போட் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் உபசரணையுடன் விசேஷமாக குறைக்கப்பட்ட விலை ரூ. 10,000/-க்கு வழங்குகிறர்கள்.] ●



**கடந்த இரண்டு கார் சீட்டிழுப்புகளில் 100 அதிர்ஷ்டப் பரிசு பெற்றவர்கள் தலா ரூ. 1,110/- பரிசு பெற்றுர்கள்.**

● இவைகள் தீர்வை உட்பட வழமையான கம்பெனிப் பட்டியல் விலைக்குக் குறைந்ததாகும். இந்தக் கார்களையும், ட்ராக்டரையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாள்களுக்கு மட்டுமே] வழங்கப்படும்.

## உங்கள் பழைய லொத்தர் டிக்கெட்டைக் கொண்டு மேலதிக ரொக்கப்பணம் பரிசாகப் பெறுங்கள்.

1. 1967 ஏப்ரில் 13-ம் திகதி நடைபெற்றதும் 20-ம்திகதி நடைபெறவிருப்பதுமான 137-வது, 138-வது இலக்க சுவீப்புகளுக்கு நீங்கள் வாங்கிய டிக்கெட்டுகளுக்கு இந்த லொத்தர்களில் பரிசு கிடைக்காவிட்டால், இந்த டிக்கெட்டுகளின் மறுபுறத்தில் கீழ் கேட்டுள்ளவற்றை தெளிவாக எழுதவும்.
   அ. 1967 ஏப்ரில் 27-ந் திகதி நடைபெறவிருக்கும் 139வது இலக்க லொத்தர் சீட்டிழுப்பில் முதலாவது பரிசைப் பெறக்கூடிய டிக்கெட்டின் எழுத்துக்குமுன் உள்ள இலக்கங்களை முன்கூட்டியே குறிப்பிடுங்கள். உதாரணமாகப் பரிசுபெறும் இலக்கம் 25A0275 ஆக இருந்தால் நீங்கள் 25 என்பதைக் குறிப்பிட வேண்டும். இந்த இலக்கம் 01 க்கும் 99 க்கும் இடையில் எந்த இலக்கமாகவாவது இருக்கலாம்.
   ஆ. உங்கள் பெயரும், விலாசமும்.
2. உங்கள் பிரவேசப்பத்திரத்தை அல்லது பத்திரங்களைக் கவரில் அடைத்து அதன் இடது பக்க மேல் மூலையில் 'போட்டி' என்று குறிப்பிட்டு, தேசிய லொத்தர் சபை, 502/1, காலி ரோட், கொழும்பு-3 என விலாசமிட்டு 1967 ஏப்ரில் 27-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள்.
3. ஒரு கவரினுள் எத்தனை பிரவேசப் பத்திரங்கள் வேண்டுமானாலும் வைத்து அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு மனுவுக்கும் ஒரு டிக்கெட் பாவிக்கப்படவேண்டும்.
4. சரியான விடைகள் அனுப்புவோர்களுக்கு ரூ. 1250/-சமமாகப்பங்கிட்டுக் கொடுக்கப்படும். 50க்கு மேற்பட்ட சரியான விடைகள் இருக்குமானல் முதல் 50ஐயும் தெரிந்தெடுத்து அவர்களுக்கு பரிசுத்தொகை ரூ. 1250/- பங்கிட்டு வழங்கப்படும். ஒருவருக்கு ஒரு பரிசுக்குமேல் வழங்கப்படமாட்டாது.
5. நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானது. இந்தப் போட்டி சம்பந்தமான எந்தக் கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இந்தப் போட்டியில் பரிசு பெற்றோர்களின் பெயர்கள் 1967 ஏப்ரில் 30-ம் திகதிய புதினப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

## விளம்பரம்

### மனேஜர் தேவை

சுருவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

20—45 வயதுக்கு உட்பட்ட கனிஷ்ட தராதரம் அல்லது கூட்டுறவுப்பயிற்சி, அல்லது வியாபார அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம்: ரூபா 100/- — 150/- வரை [சகல படிகளுமுட்பட தராதரத்திற்கேற்ப]

பிணை: ரொக்கம்: ரூபா 2000/-. ஆதனம்: ரூபா 3000/-.

குடியிருப்பு வசதியுண்டு. உடன் நியமனம் வழங்கப்படும். 30-4-67க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
சுருவில்ப. நோ. கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை.
1746

## வரிவிளம்பரம்

### சோதிடம்

இளவாலை, சேந்தான்குளம், கீரிமலை ரோட்டில் பாக்கியவாசா இல்லத்திலிருந்து கந்தையா வயிரவப்பிள்ளை கைரேகை, குறிப்பு, ஒருவர் வசிக்கும் மனை, கல்வி, தொழில், முகராசி, கஷ்டநிலை, வருத்தநிலை, வழக்கு சம்பந்தமான பலன்களைப்பற்றி எடுத்து விசேஷமாகச் சொல்லி வருகிறர். நிவர்த்தி செய்தும் கொடுக்கிறர். நேரில் சந்திக்கவும். 15 நாட்கள் மட்டுமே குறித்த விலாசத்தில் தங்குவார். 1920

உங்கள் எதிர்காலப்பலன் அறிய விரும்புகிறீர்களா? இன்றே பிறந்ததிகதி, வழக்கமான கையெழுத்து பெயர் விபரங்களோடு வருடப்பலனும் மூன்று கேள்விகளுக்குரிய விடையையும் ரூபா 5/- போஸ்ற்றல்ஓடர் அனுப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள். எம். எஸ். கே. இலட்சுமணன், 253/3, முரசுமோட்டை, பரந்தன். 1922

## விற்பனைக்கு

வீடும் வளவும்

யாழ்ப்பாணம் இல. 20, கண்டி வீதியிலுள்ள 3 பரப்பு 1 குழியும் விஸ்தீரணமுள்ள காணியும் நாலு படுக்கை அறைகள், ஸ்ரோஸ், வேலைக்காரர் அறை, சமையலறை, மின்சாரம், தண்ணீர்வசதி, வடிகால் முதலிய வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. கூடிய விலைகேட்பவர்களது விண்ணப்பம் கவனிக்கப்படும். விபரங்கட்கு B. S. ஜோசேப் சிலோன் மேச்சன்ற்ஸ் லிமிட்டெட், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1697

காணி

முழு வீட்டுடன் சேர்ந்த காணி பரப்பு 3 1/2 விற்பனைக்கு உண்டு. விலாசம் நம். 26, 2-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். விபரங்கட்கு W. சூசைப்பிள்ளை, நம். 103, 16-வது ஒழுங்கை, காலேஜ் வீதி, கொழும்பு-13. தொடர்பு கொள்ளவும். 1917

முந்திரிகைப்பழம்

இனிப்பு முந்திரிகைப் பழம் விற்பனைக்குண்டு. R. தனநாயகம், தொண்டைமானறு. 1924

வியாபார ஸ்தலம்

கிளிநொச்சி கண்டி ரோட்டில் இரும்புச்சாமான்களுடனும் தளபாடச் சாமான்களுடனும் வியாபார ஸ்தலம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: அ. க. சிவக்கொழுந்து, வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1923

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ் விசாரணை

# "தகப்பனாரின் தலையில்எதிரி பொல்லால் அடித்தார்"

## கோப்பாய் கொலை வழக்கில் இளம் பெண் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி "அன்றிரவு பத்துமணிக்கு குசினியிலிருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒழுங்கையில் முதலாம் எதிரி துரைசிங்கம், அப்புவின் மண்டையில் பொல்லால் 'மளார்' என்று அடித்த சத்தம் எனக்குக் கேடட்டது. அதைத் தொடர்ந்து 'ஐயோ ஐயோ' என்று அப்பு கத்தினார். நான் அவ்விடத்திற்குச் சென்ற பொழுது, அப்பு இரத்தம் வழிய விழுந்து மயங்கிக்கிடந்தார்."

கோப்பாய் கொலைவழக்கில் சாட்சியமளித்த 16வயதான சொலையுண்ட பொன்னனின் மகள் பூமணி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி.தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் கோப்பாயில் 65-ம்ஆண்டு ஆகஸ்ட் 2-ந்தேதி சின்னத்தம்பி துரைசிங்கம், சின்னத்தம்பி குணம் ஆகிய இரு சகோதரர்களும், அவரது மாமன் கிட்டன் பொன்னனைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ரி.தம்பித்துரை புறக்டர்களான ஆர். விஸ்வநாதன், கே. உலகநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். புறக்டர் தேவசகாயம் எதிரிகளுக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

கொலையுண்டவரின் மகள் பூமணி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

எதிரிகள் இருவரும் சொந்தக்காரர்கள். அவர்கள் எங்கள் வீட்டுக்குச் சிறிது தூரத்தில் வசிக்கின்றார்கள். சம்பவம் நடந்ததினம் இரவு குசினியில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்பு வெளி விறாந்தையில் இருந்தார். குசினிக்குள் கைவிளக்கு இருந்தது. விறாந்தையில் லாந்தர் இருந்தது. 2-ம் எதிரி குணம், அப்புவை ஒழுங்கையில் நின்று பொன்னன் பொன்னன்என்று கூப்பிட்டார் அதுகுணசிங்கத்தின்குரல்என்றுஎனக்குத்தெரியும்.

நீதியரசர்: குசினியிலிருந்து பார்க்க ரோட்டுத் தெரியுமா?- தெரியும்.

நீதி: பொன்னன் என்று கூப்பிட்டவரை நேரில் கண்டீரா?- ஆம். அப்பு போன போது நானும் லாம்புடன் சென்றேன். ஐயோ', ஐயோ என்ற சத்தம் வெளியில் கேட்டது. என்பின்னால் ஆச்சியும் வந்தார். அப்பு மூக்காலும், வாயாலும் இரத்தம் வழிய மயங்கிக் கிடந்தார். இரு எதிரிகளும் ஒருவர்பின் ஒருவராக ஓடினார்கள். 1-ம் எதிரி பொல்லு வைத்திருந்தார். நான் 'ஐயோ' என்று குளறி அழுதேன். குசினியிலிருந்த போது அப்புவிற்கு அடிவிழுந்த சத்தம் 'மளார் மளார்' என்று கேட்டது.

நீதி: என்ன மாதிரிச்சத்தம். விபரமாகச் சொல்ல முடியுமா?- அப்புவின் மண்டையில் 1-ம் எதிரி பொல்லால் அடித்த சத்தம் கேட்டது. [கோர்ட்டில் சிரிப்பு]

நீதிய: எதிரிகள் நடந்து போனார்களா?- ஓடினார்கள். அதன்பின் அப்புவை காரில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். நான் அப்புவை இறந்த அன்று போய்ப்பார்த்தேன்.

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட்ரி. தம்பித்துரை குறுக்கு விசாரணை செய்கையில் பூமணி கூறியதாவது:- எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் சொந்தக்காரர்கள் வசிக்கிறார்கள். அப்பொழுது வேலி அடைக்கவில்லை. எங்கள் குசினியிலிருந்து இரவில் ஒழுங்கையில் நடப்பதைப் பார்க்கமுடியாது. எதிரிகள் எனது சொந்த மச்சான்மார்.

அட்வகேட்; தகப்பனார் ஆத்திரம் வரக்கூடியதாக எதுவும் கூறவில்லையா? இல்லை.

அட் எதிரிகள் தகப்பனாரை எப்படி அழைப்பார்கள்?-மாமா என்று.

அட்! அன்றிரவு கூப்பிட்டவர் தகப்பனாரின் பெயரைச் சொல்லி கூப்பிட்டார்?ஆம்.

அட்: தகப்பனார் யார் என்று கேட்டாரா? ஆம்.

நிதியரசர்! அப்பொழுது சாப்பிடத் தொடங்கி விட்டீரா?-ஆம்.

அட்: தகப்பனார் கள் குடிக்கிறவரா?-எனக்குத் தெரியாது.

அட்: கள்ளைக் கண்ணால் கண்டிருக்கிறாயா?- இல்லை.

அட், வெளியிலிருந்த தகப்பனாரை கூப்பிட்டபோது நீர் சந்தேகப்படவில்லை? இல்லை.

அட்! தகப்பனார் சத்தம் போட அயலவர்கள் வந்தார்களா?- இல்லை. நாங்கள் ளறத்தான் வந்தார்கள்.

அட்! தகப்பனாரை யார் அடித்ததென்று கூற முடியுமா?-1-ம் எதிரிதான் அடித்தார்.

அட்! அடிக்கும் போது நீர் காணவில்லை?- இல்லை. அடித்து விட்டுப் போன பின் தான் கண்டேன்.

அட்: பொல்லு வைத்திருந்தவர் அடித்ததாக நீ நினைத்தாய்?-ஆம்.

அட்: பொல்லைக் கண்டீரா?-ஆம்.

அட்! என்னநிறம்? தெரியாது

அட்; தகப்பனாருடன் கதைக்க முயற்சித்தீரா?- ஆம்.

அட்: என்ன நடந்ததென தகப்பனாரிடம் கேட்கப் பார்த்தீர்? ஆம்.

அட்: தாயாரும் வந்து தகப்பனாருடன் கதைக்கப் பார்த்தாரா? ஆம்.

அட்! தகப்பனார் தனக்கு யார் அடித்ததென்று கூறினாரா?-இல்லை.

விசாரணை தொடர்ந்து இன்று நடைபெறும்.

## தேவை

பெண்கள்

எமது வாசனைத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்குப் பெண்கள் தேவை. [வயது 18-20] வசிப்பதற்கும் இடவசதியளிக்கப் படும். நோயற்ற, திடகாத்திரமானவர்கள் மாத்திரம் நேரில் வரவும். எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2384

## விற்பனைக்கு

தளபாடங்கள்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதியில்334இலக்ககடையிலுள்ள தளபாடங்கள் மற்றும் பொருட்கள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு 155/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும். 1921

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நெஞ்சில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வர் வி. இரத்தினவடிவேலு, சனசமூக நிலையத் தலைவர் எஸ். ஞானமூர்த்தி மற்றும் சிலர் நின்றனர். பொலிசார் எங்களை அறையிலிருந்து கொள்ள வேண்டுமென்றும், வெளியில் தலைகாட்டினால் முடி வெட்டிப்போடுவதாகவும் பயமுறுத்தினார்கள். அப்பொழுது துப்பாக்கிவெடிச் சத்தங்கள் வெளியில் கேட்டது. நான் இருந்த அறைச் கதவு இடைவெளிமூலம் வெளியில் நடந்ததைப்பார்த்தேன்.

பல வேளைகளில் 'சூட்சூட்' என்ற சத்தம் கேட்டது. அதைத்தொடர்ந்து 'வடிச் சத்தமும்கேட்டது. நிலையத்திலிருந்தபோது இராணுவ வீரர்ஒருவர், பருத்தித்துறை எம். பி.யை பார்த்து நீதான எம். பி., உனக்கு தெமழு வேணுமா? என்று கேட்டார். 'கையில் உள்ள பொல்லுஉங்களுக்குத்தான்' என்று அந்த இராணுவவீரர் அரைகுறை தமிழில் கூறினார்.

ஏ.எஸ்.பி.: இங்கு சொல்லியவற்றைபொலிசாருக்கும் கூறினீரா? நான் நடந்தவற்றைஎல்லாம் பொலிசாருக்கு கூறினேன். அவருக்கு என்னுடையமொழி விளங்காததால், நான்கூறிய சிலவற்றை குறியாமலிருந்தார். இதனால் சுருக்கமாககூறினேன்.

நீதிபதி: நீர் சம்பவத்தைக் கண்டது பற்றி 'ஈழநாடு' பத்திரிகைக்கு எழுதினீரா? ஆம் எழுதினேன். இன்ஸ்பெக்டர் பத்திரான இரத்தக் காயங்களுடன் அங்கு வந்தபொழுது, அவருக்கு அனுதாபம் தெரிவித்தேன். [கோர்ட்டில் சிரிப்பு]

## விமான விபத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விமானத்தின் உடைந்த பாகங்களும் பரவலாகக் காணப்பட்டன.

மீட்பு வேலைகளில் ஈடுபட்டிருப்போருக்கு கடும் மழை ஒரு பெரும் தடையாக இருக்கிறதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

கடைசியாகவந்த செய்திகள், 130 பிரயாணிகளில் சொற்பமானவர்களே தப்பியிருப்பதாகத் தெரிவிக்கின்றன.

## என் கட்சிக்கு . .

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

கொட்டில்கள் அமைத்தனர். இது ஒரு திட்டமிட்டப்பட்ட சட்டவிரோதக்குடியேற்றமாகும். இதுபற்றி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும் நடவடிக்கைகள் எடுக்கமுடியாது போய்விட்டது. காணி அதிகாரிஏற்கனவேநடவடிக்கை எடுத்திருந்தால் இன்று நிகழ்ந்த அசம்பாவிதங்களுக்கு இடமிருந்திராது.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:- கல்முனைக் கலவரத்தில் எவரையும் தனிப்பட்டமுறையில் குற்றம் காணமுடியாது. இவ்விஷயத்தில் என் கட்சிக்கோ எனக்கோ சம்பந்தம் இருப்பாக கூறுவது சரியான கூற்றல்ல. மந்திரி என்ற முறையில் நான் இன மத பாகுபாடுகள் இல்லாது கடமை புரிவேன். இதனை நான் இங்குபலமுறை குறிப்பிட்டு வந்துள்ளேன்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்றுமாலை 5மணிமுதல் 6 மணிவரை ஸ்ரீமத்கைலாசநாத சுவாமிகள் பக்கவாத்தியசகிதம் திருப்புகழ் கச்சேரிநடத்துவார். மாலை 6 மணிமுதல் 7மணிவரை திரு. பொன் அப்புக்குட்டி சொற்பொழிவு நிகழ்த்துவார். இரவு 7மணிக்கு [illegible] சவம் நிகழும்.

## தேசிய சுவீப் . . .

[1-ம் பக்கத் [தொடர்ச்சி]

தலா ரூ389-50சதம்பரிசு பெறும் 100 டிக்கட்டுகள்.

| | |
|---|---|
| 24 K 0008 | 24 J 0157 |
| 03 Y 0891 | 28 Y 0253 |
| 02 X 0688 | 20 L 0184 |
| 22 G 0210 | 23 G 0460 |
| 01 X 0974 | 22 G 0373 |
| 01 Z 0706 | 23 X 0619 |
| 01 [illegible] 0059 | 02 L 0770 |
| 02 T 0359 | 31 O 0907 |
| 23 M 0291 | 12 U 0274 |
| 22 Q 0137 | 09 R 0202 |
| 04 B 0606 | 22 A 0300 |
| 14 K 0763 | 20 E 0894 |
| 23 B 0040 | 07 P 0872 |
| 29 B 0571 | 07 J 0671 |
| 02 A 0173 | 29 O 0318 |
| 28 V 0576 | 19 W 0847 |
| 26 L 0635 | 04 T 0052 |
| 03 X 0772 | 0 U 0248 |
| 05 A 0781 | 10 U 0758 |
| 19 X 0020 | 02 N 0443 |
| 02 E 0555 | 17 U 0504 |
| 05 R 0319 | 27 P 0921 |
| 16 Y 0428 | 07 P 0669 |
| 26 J 0409 | 25 R 0405 |
| 31 T 0229 | 11 K 0787 |
| 04 Z 0846 | 11 O 0297 |
| 19 K 0538 | 12 W 0582 |
| 17 U 0816 | 13 S 0470 |
| 08 V 0501 | 05 V 0115 |
| 23 X 0746 | 30 [illegible] 0739 |
| 11 A 0860 | 28 M 0173 |
| 04 X 0327 | 15 N 0836 |
| 28 P 0164 | 18 H 0620 |
| 29 B 0105 | 13 L 0165 |
| 20 D 0154 | 03 U 0027 |
| 18 P 0080 | 31 J 0032 |
| 28 W 0165 | 27 S 0284 |
| 03 C 0278 | 12 J 0275 |
| 05 H 0550 | 15 X 0952 |
| 10 D 0447 | 09 Y 0165 |
| 09 [illegible] 0604 | 15 Y 0779 |
| 28 S 0306 | 11 Q 0728 |
| 32 U 0310 | 19 T 0836 |
| 25 Z 0034 | 02 V 0074 |
| 02 L 0499 | 20 K 0179 |
| 01 W 0238 | 30 Q 0355 |
| 17 W 0619 | 29 O 0472 |
| 16 P 0706 | 03 S 0309 |
| 13 X 0858 | 22 R 0223 |
| 19 T 0126 | 14 I 0360 |

இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.

## சைக்கிளில் சென்றவருக்கு கத்திக்குத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் நேற்று மாலை ஓர் இளைஞர் கத்தியால்குத்தப்பட்டதாகத் தெரிகின்றது. வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நவரத்தினம் என்னும் அந்த இளைஞரை யாரோ சைக்கிளில் வந்து பின்புறமாகக் கத்தியால் குத்திவிட்டு ஓடியதாகக் கூறப்படுகிறது. நவரத்தினம் கத்திக்குத்துக் காயத்துடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டுள்ளார்,

## இலங்கை ஒலிபரப்பு கூட்டு ஸ்தாபனம்

[21-4-67] வெள்ளி

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு. 7-30 குரல்வகை, 7-45 தோத்திரப்பாடல்கள்- எம் சிவராசா, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை. மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 தொழிலாளர் வேளை.

இரவு 6-15 பஜனை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 முத்தி நெறி, 7-45 சைவசமயப் பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கதாப்பிரசங்கம் —கே. செல்லத்தம்பி, 10-15 தேர்ந்த இசை.

## பண்டாரகம எம். பி. பதவி இழந்தார்

கொழும்பு, வியா

பண்டாரகம தேர்தல்ஆட்சேப அப்பீல் வழக்கு இன்று சுப்ரீம்கோர்ட்டில்தீர்ப்புக்கு எடுத்துக்கொண்டபொழுது நீதியரசர்கள் அப்பீலை அனுமதித்து தீர்ப்பு வழங்கினார்கள். இதன் காரணமாக பண்டாரகம எம்.பி. திரு. கே. டி.வி. டிபரேரா தமது பார்லிமெண்ட் உறுப்பினர் பதவியை இழந்துள்ளார்.

அப்பீல் விசாரணை பிரதம நீதியரசர் எச். என். ஜி. பெர்னாண்டோ, நீதியரசர்கள் எச்.டபிள்யு.தம்பையா சி.பி. ஏ. சில்வா ஆகியோர்கள்முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

## கூட்டத்தில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டைய ஆட்கள் எங்களுக்கும், 'ஜீப்'பிற்கும் கல் எறிந்தும், கூக்குரல்போட்டும் என்னையும் கொல்ல எத்தனிக்கிறார்கள் எனச் சொல்லிக்கொண்டிருக்கும் போது அங்கு இராணுவச் சிப்பாய்கள் வந்தனர். அவர்களும், பொலிஸாரும் அவ்விடங்களிலுள்ள கற்களைப் பொறுக்கிக் கடைகளுக்கும் வீடுகளுக்கும் எறிந்து கொண்டிருந்தனர். பின்னர் நானும், இராணுவச் சிப்பாய்களால் தாக்கப்பட்டேன். அந்நேரத்தில் சார்ஜன்ட் ராசரத்தினம் மேடையில் நின்றுகொண்டு பருத்தித்துறைப் பக்கம் நோக்கிச் சுட்டார். இன்ஸ்பெக்டர் பத்திரான தான் வைத்திருந்த ஒரு பெட்டியிலிருந்து துப்பாக்கிக்குண்டுகளைப் பொலிஸாருக்கு எடுத்து கொடுத்துக்கொண்டிருந்தார். அதைத் தொடர்ந்து சனசமூகநிலைய 'லயிட்'டைப் பொலிஸார் அணைத்துவிட்டு எங்களை உட்செல்லுமாறு உத்தரவிட்டார்.

## வானில் வந்தவரை அடித்தார்கள்

திரு. எஸ். கணபதிப்பிள்ளை சாட்சியமளிக்கையில், நான் தம்பசெட்டியில் வசிக்கிறேன். சம்பவம் நடந்த தினத்தன்று தொண்டமானாறு சென்று திரும்பி வல்வெட்டித் துறையை நோக்கி வரும் போது இராணுவத்தினர் பஸ்ஸை மறித்தனர். நான் உடனே அதனைவிட்டு இறங்கி வல்வெட்டித்துறைச் சந்திக்கு நடந்துவந்தேன். சந்தியிலிருந்து 40 யார் தூரத்துக்கப்பால் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் என்னை மறித்து அந்தப் பக்கம் போகக்கூடாதெனக் கூறினார். அந்நேரத்தில் உடுப்பிட்டிச் சந்தியிலிருந்து வல்வெட்டித்துறைச் சந்தியை நோக்கி ஒரு வான் வந்துகொண்டிருந்தது. அந்த 'வானை'ப் பொலிஸார் மறித்தனர். அவ்வானிலிருந்து ஓர் உயர்ந்த மனிதர் இறங்கியபோது பொலிஸார் அவருக்கு அடிக்க, அவர் பொலிஸ்நிலையப் பக்கமாக ஓடினார். அந்நேரத்தில் "சூட் சூட்" என்ற சப்தம் கேட்டது. நான் உடனே திரும்பி, கம்பர்மலை உடுப்பிட்டி வீதிகளுக்கூடாக வீட்டுக்குப் போனேன் என்றார்.

மற்றும் தலைமை இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தியும் சாட்சியமளித்தார்.

தொடர்ந்து இன்று விசாரணை நடைபெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org